# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-காஞ்சிபுரம் மாவட்டம்

(31.10.2015 முதல் 04.11.2015 வரை)

**கடந்த மூன்று நாட்களில் நிலவிய வானிலை (27.10.2015 முதல் 29.10.2015)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 17.6மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 32.0-34.0°C மற்றும் 22.0-24.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 70 முதல் 90 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 2-8 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 31.10.2015 | 01.11.2015 | 02.11.2015 | 03.11.2015 | 04.11.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 13 | 20 | 6 | 13 | 13 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்று வரும் திசை | கிழக்குவட கிழக்கு | கிழக்குவட கிழக்கு | கிழக்குவட கிழக்கு | கிழக்குவட கிழக்கு | கிழக்குவட கிழக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 30 | 30 | 30 | 30 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 23 | 23 | 23 | 23 | 23 |
| ஈரப்பதம் | 80–90 | 80–90 | 80–90 | 80–90 | 80–90 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான பெய்ய வாய்ப்புள்ளது.
2. இளம் கன்றுகள் மற்றும் ஆட்டு குட்டிகளை மழையில் நனையாமல் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை மழையில் நனையாதவாறு சேமிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.
4. அடர்தீவன உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால் அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
5. கால்நடைகளின் கொட்டகையின் மேற்கூரையை சரி செய்து கொட்டகையின் உள் தண்ணீர் பூகாமல் பார்த்துக் கொள்ளவும்.
6. கன்றுகள், செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு சரியான குடற்புழு நீக்க மருந்து அளித்து குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.
7. கோழிப்பண்ணைகளில் தூய்மையான குடிநீர் அளிப்பதன் முலம் ஈ கோலை நோய்த் தாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள் வேளாண் அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம்)**

முக்கிய பயிர்கள்: நெல், கரும்பு மாற்றும் வேர்க்கடலை

1. அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் உழவர்கள் தங்களுடைநெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதை தவிர்க்குமாறும் மற்றும் உரமிடுதல் தள்ளிப்போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்
2. உழவர்கள் மழைநீரை சேகரிப்பதற்கான தகுந்த வழிமுறைகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. நெற்பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் காணப்பட்டால் மேன்கோசெப் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணிரில் 2 கிராம் என்ற அளவு கலந்து 15 நாட்கள் இடை வெளியில் 2 அல்லது 3 முறை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. மிளகாய் செடியில் காய் துளைக்கும் வண்டுகளை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 என்ற அளவில் வைக்கவும்.